# இந்திய மெய்யியலில் அளவை – ஓர் அறிமுகம்

*கே. கணேசராசா, சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்*

**சுருக்கம் :**

இந்திய மெய்யியல் தனக்கேயுரிய அளவையியல் முறைகளைச் சுயாதீனமாக விருத்தி செய்து வந்துள்ளது. இவை வைதீக, அவைதீக தர்சன மரபிற்கேற்ப மாறுபட்டிருந்த போதும் பொதுவான விருத்தியொன்றைப் பெற்றிருந்தது. வைதீக தர்சனங்களில் நியாய, வைசேடிகம் சிறப்பான முறையில் இந்திய தர்க்க கருத்துக்களை விருத்தி செய்தது. நியாய தத்துவம் கௌதம முனிவராலும், வைசேடிக தத்துவம் கணாத முனிவராலும் முன்வைக்கப்பட்ட தர்சனங்களாகும். இவர்களின் அளவையியல் கருத்திற்கும், மேலைத்தேச, பௌத்த அளவையியல் கருத்திற்குமிடையில் பல ஒற்றுமைகளும், வேற்றுமைகளும் காணப்படுகின்றது.

**அறிமுகம் :**

மனித வரலாறு எவ்வளவு தொன்மையானதோ, அத்தகைய தொன்மை வாய்ந்தது அறிவு வேட்கை சூழலில் உள்ள பொருட்களை நமது ஆட்சிக்குட்படுத்தி பணி செய்வதற்கு அறிவு இன்றியமையாதது. பொருத்தமானதைப் பொருத்தமற்றதில் இருந்து பிரித்தலே அறிவு வளர்ச்சியின் ஆரம்ப நிலையாகும்.

அறிவு எழுவதற்கு இரு நிபந்தனைகள் உண்டு. ஒன்று மனிதனது அறிவாற்றல்; மற்றது அவனது அனுபவம். ஒரு மனிதன் ஏனைய மனிதர்களோடும் இயற்கைப் பொருட்களோடும் உறவு கொள்கின்றான்.

இயற்கை நிகழ்ச்சிகளையும் மக்களது நடை, உடை, பாவனை முதலியவற்றையும் கூர்ந்து கவனித்து அறிந்து கொள்கின்றான். எனவே, புலக்காட்சியும், அனுபவமும் அறிவுக்கு இன்றியமையாதன வாகின்றன. அனுபவத்தை அறிவாக மலரச் செய்வதற்கு அறிவாற்றல் துணை செய்கிறது. அறிவாற்றல், அனுபவம் இவ்விரண்டினுள் எது முதன்மையானது?

சிந்தனைத் திறன் முக்கியமானதா? அல்லது அனுபவம் முக்கியமானதா? புறவுலகிலிருந்து புலன்கள் வாயிலாகப் புகுகின்ற காட்சிகளின்றி அறிவாற்றல் தொழிற்படுதல் இயலுமா? சிந்திக்கும் திறன் இல்லையேல் புலக்காட்சிகள் தொழிற்படுதல் எவ்வாறு? சிந்தனை தரவுகளை அடிப்படையாகக் கொண்டு செயற்படுகிறது.[1] இத் தரவுகள் ஒவ்வொன்றும் கருத்தளவில் மற்றையவற்றுடன் இசைவான தொடர்புகளைப் பெற்றிருக்க வேண்டும். முரண்பாடுகள் ஒத்திசைவான சிந்தனைக்கு இடையூறு விளைவிக்கும். முரண்பட்ட தரவுகளால் தவறு நிகழ்தல் சாத்தியமே. இத்தவறுகளைத் தவிர்க்க முயலுவதே அளவையியலாகும். அதாவது வலிதான சிந்தனையின் வடிவமே அளவையியலாகும் (Logic).

இந்திய மரபில் அளவையியலானது பண்டைய நாளில் இருந்தே ஆராயப்பட்டு வந்துள்ளது. தொடக்கத்தில் இது "அன்விஸ்கி" (Anviskski) என அழைக்கப்பட்டது. வாத்சாயனர் அன்விஸ்கியைத் தருக்கக் கோட்பாடு என்றார். சொல்லாடலுக்கான கருவியாகவே அன்விஸ்கி பயன்பட்டது. சொல்லாடலுக்குக் குறைந்தபட்சம் இரு தரப்பினர் தேவைப்படுவர். அவர்கள் முறையே வாதி, பிரதிவாதி எனப்படுவர். சொல்லாடலிற்கான கருத்தொன்றை முன்மொழிபவர் வாதி என்றும், அக்கருத்தை மறுத்து எதிர் வாதம் புரிபவர் பிரதிவாதி என்றும் அழைக்கப்படுவர். ஒரு வாதத்தின் பொழுது வாதியை மேலே தொடர முடியாமல் செய்வது அல்லது அவருக்கே தாம் எடுத்த நிலையின் முரண்பாட்டைப் புலப்படச் செய்வது பிரதிவாதியின் பணியாகிறது. அறியப்பட முடியாது ஐயத்திற்கு இடமளிக்கும்

கூற்றுக்களை அளவையியலின் துணை கொண்டு தெளிவதே நியாயம் (Nyaya) என்பதால் அளவையியலின் தொடக்கத்தை "நியாய சாஸ்த்திரம்" தோன்றிய காலத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம்.

இக்காலமே இந்திய அளவையியலின் உதய காலமாகும். இக்காலத்தில் பிரமாணத்திற்கு முதலிடம் அளிக்கப்பட்டமையால் இது "பிரமாண சாஸ்திர" காலம் எனவும் அழைக்கப்படுகிறது. அடுத்து வந்த காலப் பகுதியில் அறிவு, அதன் வரையறை என்பன தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. இதனால் தருக்க அறிவு வளரலாயிற்று.

இவ்வளர்ச்சியை நவநியாயக் கொள்கையின் எழுச்சியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கலாம். நவநியாயக் கொள்கையினர் குறியீடுகளைப் பயன்படுத்தவில்லை எனினும் அவற்றுக்கு இணையாகச் சில சொற்களை வகுத்துக் கொண்டார்கள். அதாவது அவச்சேதம், வியாப்தி, நிருபணம், வியாப்பியம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி வெற்றி கண்டனர். நியாய அளவையியல் நவநியாயக் கொள்கையினர் கையில் மீள்பார்வைக்கும், மீள் பரிசீலனைக்கும் உட்படுத்தப்பட்டது. குறிப்பாக இரகுநாத சிரோமணியின் ஆக்கங்களில் பெரும் மாற்றத்தைப் பெற்ற பொழுதும் பிற்கால அளவையியல் ஆசிரியர்களின் கவனத்தை ஈர்க்கப் பெறாமையினால், பெரும்பாலும் கவனிப்பாரற்றவையாயின.

நியாயக் கொள்கையின்படி அறிவு அல்லது அறியும் செயல் ஆன்மாவிற்குரியதாகும். அதாவது ஆன்மா, புற உலகப் பொருட்களை அறிவதாகும். இதனை "பிரமா", "அப்பிரமா" என்று பிரிப்பார்கள். பிரமா என்பது பொருந்தும் அறிவு, ஏற்கத்தக்க அறிவு என்று பொருள்படும். *அப்பிரமா என்பது பொருந்தா அறிவு எனப்படும்.*

பொருந்துவது என்பது விதிகட்கு அமையப் பொருந்துவது. பொருந்தாமை விதிகளோடு முரண்படுவதாகும்.
பிரமா என்பதனுள் காட்சி, கருதல், உவமை, ஆகமம் அல்லது உரை ஆகியவை அடங்கும். அப்பிரமா என்பதனுள் ஐயம், திரிபு, விகற்பம் ஆகியவை அடங்கும்.[2] அறிவு அல்லது வித்தியா, அவித்தியா அல்லது அறியாமை என்ற குறைபாடு வைசேடிகத்துள்ளும் காணப்படுகிறது. ஐயம், திரிபு, விகற்பம் கனவு என்பன பொருளை உள்ளவாறு உணர்த்துவதில்லை. பொருள் காட்சியில் தோன்றுவது போன்று ஞாபகத்தில் புலப்படுத்துவதில்லை என நியாயக் கொள்கையினர் வாதிடுகின்றார்கள். முன்னரே அமைந்த பொருளின் சாயல் அல்லது பதிவை ஞாபகப்படுத்துகிறது. அது கடந்தகால அனுபவமாகும். நியாயக் கொள்கையினரைப் பின்பற்றிய வைசேடிகரில் சிலர், ஞாபகத்தை ஏற்புடைய அறிவாகக் கொள்வதில்லை. ஆனால், ஏனைய வைசேடிகர்கள் அதனை ஏற்புடைய அறிவென்கின்றனர். ஆனால், உள்ளுணர்வினை நியாயக் கொள்கையினர் பொருந்தும் அறிவெனவே கொள்கின்றனர்.

நேரடி அறிவுக்குக் காட்சியே ஆதாரமாயினும் அக் காட்சிகூட அனுமானத்தின் ஒரு வகையே. பெரும்பாலான இந்திய தர்சனங்கள் அனுமானத்தையும் அறிவின் வாயிலாக ஏற்றுக் கொள்கின்றன. தருக்க சங்கிரக ஆசிரியரான அன்னம்பட்டர் தனது தீபிகையில் அனுமானத்திற்கு மிகவும் பொதுவான வரைவிலக்கணமொன்றைத் தந்தார். தெரிநிலை அறிவிலிருந்து பெற்றவற்றை மொழி மூலம் விளங்கப்படுத்துவதோடு, வழிநிலை அறிவொன்றை அனுமானத்தின் மூலம் பெறுகின்றோம் என்றார்.

## இந்திய மெய்யியலில் பிரமாணங்களும் அவற்றின் முக்கியத்துவமும் :

ஏலவே அறியப்பட்டதொன்றை உண்மையென உறுதிப்படுத்துவதற்குப் பிரமாணம் என்ற சொல் பயன்படுத்தப்படுத்தப்படுகிறது. அதேவேளை அறிவைப் பெறுவதற்கான வாயிலும் பிரமாணம் என்றே அழைக்கப்

படுகிறது. பிரமாணம் எண்ணியுணரும் திறனை வளர்க்கும் காரணத்தால் எண் என்றும் எண்ணுதற்குத் துணை புரிதலால் ஏரணம் என்றும் வழங்கப்படும். சிறப்பு என்னும் பொருளைத் தருகின்ற பிர- என்ற முன் சொல் அளவிடப்படுதல் என்ற பொருளில் வழங்கப்படுகிறது. மாணம் - என்ற சொல் சேர்ந்து வரும் பிரமாணம் என்ற வடசொல்லிற்கு இணையான தமிழ் சொல் அளவை என்பதாகும். உலகப் பொருட்களை அளந்துணர்ந்து கொள்ளுதற்குக் கருவியாதலால் பிரமாணமாயிற்று. பிரமாணம் என்பது அறிவு, அறிவின் கருவி என்ற இரு பொருட்களிலும் வருமாயினும் கருவி என்னும் பொருளிலேயே அதிகமாக வழங்கப்படுகிறது. அளவையை முதன்மையாகக் கொள்வது பிரமாணமாகும்.

பிரமாணம் என்பது காரணத்தையறியும் கருவியாகும். இப்பிரமாணம் இரண்டு வகைப் பொருளைச் சுட்டுவதாக இந்திய மரபில் பயன்படுத்தப்பட்டது. அதாவது பொருளை அறிவதற்கும், அதனை நியாயப்படுத்துவதற்கும் இது உதவுகிறது. உதாரணமாக எனக்கு முன்னே ஒரு மேசை இருந்தால் அதை நான் பார்ப்பேன். அங்கே நான் பார்த்ததுதான் பிரமாணமாகும். பின்னர் எவ்வாறு பார்த்தேன் என்பதையும் விளக்குவதற்குப் பிரமாணமே அவசியமாகும்.

பிரமாணம் என்ற சொல் அளவை அல்லது அளத்தல் என்று கருதப்படும் பொழுது எதைக் கொண்டு அளக்கப்படுகிறதோ அது பிரமாணமாகிறது. சுருக்கமாக இதனை "அளவை" எனக் கூறலாம். நாம் பெறுகின்ற அறிவு சரியா பிழையா என அளந்து அறிவது பிரமாணத்தின் நோக்கமாகும். வாத்சாயனர் அனுபவத்தில் பெறப்படுவனவற்றைப் பிரமாணங்களின் மூலம் ஆராய்ந்து அறிதல் எனக் கூறுகின்றார். ஆதலால் "அறிவு பெறுவதற்கு வாயிலாக விளங்குவதே பிரமாணம்". வேறு சொற்களில் கூறினால் அறிவான் பயன்படுத்துகின்ற சாதனம் அல்லது கருவியாகும். மற்றொரு நியாய வல்லுநர் பிரமாணத்தை "அறிவிற்குரிய காரணம்" என்கிறார்.[3]

பிரமாணம் என்பதற்கு அறிவைப் பெறுவதற்குரிய வழிமுறையென பொதுவாக வரைவிலக்கணம் தரலாம். அறிவிற்கான ஆதாரங்களை மதிப்பிடும் முயற்சியானது, அறிவின் ஊற்று பற்றிய பிரச்சினையுடனும் அறிவு எவ்வாறு பெறப்படுகிறது என்பதுடனும் மிகவும் நெருங்கிய தொடர்புடையது. அனுபவத்தை அறிவின் ஊற்றாகக் கொள்வது அனுபவவாதம். அறிவின் வாயில்களில் முதன்மையானது காட்சியாகும். எல்லா வகையான அறிவின் வாயில்களும் ஏதேனும் ஒரு வகையில் காட்சியை ஆதாரமாகக் கொண்டவை என்பதால் அறிவாராய்ச்சியியலில் காட்சிக்கு அடுத்த படியான இடம் அனுமானத்திற்குக் கிடைக்கிறது.

### பிரமாண வகைகள் :

இந்திய மரபில் இந்திய அளவையியலாளர்கள் பல்வேறு வகையான அறிவு வகைகளைச் சுட்டிக் காட்டியது போல் பல்வேறு வகையான அளவை முறைகளையும் சுட்டிக் காட்டியுள்ளனர்.[4] இதில் ஏறக்குறைய பத்து அளவைகள் சுட்டிக் காட்டப்படுகின்றன. இதில் ஆறு அளவைகள் பிரதானமானவையாகும். இதனால் இவ் ஆறு பிரமாணங்களும் இங்கு சுருக்கமாக நோக்கப்படுகின்றது.

1. காட்சியளவை (பிரத்தியட்சம்)
2. கருதல் அளவை (அனுமானம்)
3. உரையளவை (சப்தம்)
4. பொருட்பேறு அளவை (அருந்தாபத்தி)
5. உவமை அளவை (ஒப்பு)
6. இன்மையளவை (அபாவம்)[5]

### 1. காட்சியளவை :

பிரமாணங்களுள் காட்சி அல்லது பிரத்தியட்சம் முதன்மையானது. ஒரு பொருள் பொறி அல்லது இந்திரியத்தோடு தொடர்புறும் போது புலக்காட்சி சார் அறிவு ஏற்படுகிறது. புலன் உணர்வுகள்

ஒழுங்கமைக்கப்பட்டு அர்த்தபூர்வமாக்கப்படுவதற்கு உதவும் படிமுறை புலக்காட்சி ஆகும். இது ஒரு பொருள் அல்லது விடயத்தைப் பற்றிய அனைத்தையும் உள்ளடக்கியதாகும்.

அனுபவத்தின் வாயிலாகவோ அல்லது சிந்தனையின் வாயிலாகவோ அன்றி, நேராக அறியும் அறிவு காட்சி அறிவென்பர். "பொறியும் பொருளும் தொடர்புறுவதால் அமைவதே காட்சியறிவு". புறப்புலன்களாகிய காட்சி, கேட்டல், முகர்வு, ஊறு, சுவை ஆகியவற்றால் பெறுகின்ற அறிவு புலக்காட்சியினால் பெறுகின்ற அறிவாகும் (Multisense). உட்புலனாகிய மனம் அதற்குரிய பொருட்களோடு தொடர்புறுகின்றதால் எழுகிற அறிவு உள் அறிவு எனப்படும். இதனை மானஸ அறிவு என்பார்கள். காட்சியறிவைப் பகுப்பற்ற பொதுமையான அறிவு என்றும், விபரமான அறிவு என்றும் இரு வகையாகப் பிரிக்கின்றனர். மேலும், ஒரு பொருளைப் பற்றிப் பொதுவாகத் தெரிந்து கொள்வது நிர்விகற்பக் காட்சியாகும். மாறாக, ஒரு பொருளின் பெயர், குணம், பொருளுண்மை ஆகியவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொள்வது சவிகற்பக் காட்சியாகும்.[6]

## 2. கருதல் அளவை :

காட்சியறிவினால் பெற்ற விடயங்களைக் கொண்டு நாம் அமைக்கும் ஊகம் "அனுமானமாகும்". இதனைக் "கருதல்" எனவும் அழைப்பர். இந்திய மரபில் அனுமானம் முக்கியமான ஒரு பிரமாணமாகக் கொள்ளப்படுகிறது. இவ் அனுமானம் காட்சியினை விட வேறு ஒரு பிரமாணமாக இருப்பினும் காட்சியை ஆதாரமாகக் கொண்டும் அனுமானம் பெறப்படலாம். உள்ளடக்கியதொன்றை வெளிக்கொண்டு வருவதற்கு அனுமானம் சிறந்த ஒரு முறையாகப் பயன்படுகிறது. அனுமானம் என்பது புலன்களால் பெற முடியாத விடயங்களைப் பற்றி அறிந்து கொள்வதாகும்.[7]

"ஜயந்த" என்பவர் அனுமானம் பற்றிக் கூறும் போது இரண்டு விடயங்களுக்கு இடையேயுள்ள மாறாத தொடர்புகளை ஒன்று சேர்த்து ஏலவே உள்ள தரவுகளில் இருந்து புலனுணர்வு சாராத அறிவினைப் பெறும் கருவியாக உள்ளதே அனுமானம் என்கிறார்.

"உதயதாகரர்" அனுமானம் என்ற சொல்லை விளக்கும் போது புலனுணர்வுக் காட்சியும் அறிவுக்கான காரணமாவதோடு ஒரு எடுகூற்றில் பதங்களுக்கிடையேயுள்ள இணைக்கத் தொடர்பினை நினைவுபடுத்துகிறது என்றார். உதாரணமாக நான் மலையில் புகையுள்ளதை உணர்கின்றேன். ஆனால், அது நெருப்புடன் மாறாத இணைக்க முடையது என நினைவுபடுத்தி மலை நெருப்புடையதென்று அனுமானிக்கின்றேன்.[8]

"சீல்" என்பவர் அனுமானம் உறுதியான ஒன்றுக்கான அணுகுமுறை எனவும் அது நேரடியான காட்சியோ அவதானமோ அல்ல அதேநேரம் கருவியின் மூலம் சரியான பண்புகளை அனுபவரீதியாக அறிந்து கொள்ளுதலே அனுமானம் என்று கூறுகிறார். "சபரர்" என்பவர் அனுமானத்தை வரைவிலக்கணப் படுத்தும் போது அதனை அர்த்தமுள்ள புத்தி எனக் கூறினார்.[9] இந்திய அறிவாராய்ச்சியியலில் அனுமானம் இரண்டு வகையாகக் கூறப்படுகிறது.

1. தன் பொருட்டனுமானம் (சுவார்த்தனுமானம்)
2. பிறர் பொருட்டனுமானம் (பரார்த்தனுமானம்)

தன் பொருட்டனுமானம் என்பது ஒருவர் தனது புலன்களினூடாக உணரத்தக்க அறிவாகும். இது 3 அங்கத்துவங்களைக் கொண்டு சுட்டிக் காட்டப்படுகிறது. அவை பிரதிக்ஞை, ஏது, திட்டாந்தம்.

உதராணமாக: எங்கு புகை உள்ளதோ அங்கு நெருப்புள்ளது.
மலையில் புகை உள்ளது.
ஆகவே, மலையில் நெருப்புள்ளது.[10]

பிறர் பொருட்டனுமானம் என்பது தான் தெரிந்ததொரு விடயத்தைப் பிறரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக எடுத்துக் கூறுவது பிறர் பொருட்டனுமானம். இதனை உடன்பாட்டு வடிவத்திலோ எதிர்மறை வடிவத்திலோ கூறலாம். இந்திய

அளவையியலாளர்கள் ஐந்து அங்கத்துவங்களினூடாக இதனை விளக்குகின்றனர். அவையாவன:

பிரதிக்ஞை (Statement), ஏது (Reason), திட்டாந்தம் (Illustration), உபநயம் (Application), நிகமனம் (Conclusion)

உதாரணமாக :

இம்மலை நெருப்புடையது (பிரதிக்ஞை)

புகையுடைமையால் (ஏது)

யாது யாது புகையுடையதோ அது அது நெருப்புடையது.

அடுக்களை போல (திட்டாந்தம்)

இம்மலை நெருப்புடையது (இதுவும் அங்ஙனம்) (உபநயம்)

ஆகவே இம்மலை புகையுடையது (நிகமனம்)

## 3. உரையளவை :

சங்கரபண்டிதர் ஆப்தவாக்கியம் பற்றிக் கூறும்போது தன்கண் மயக்கமில்லாது பொருளை உள்ளவாறு உணர்ந்து உள்ளவாறு கூறுபவனே ஆப்தன். அவன் கூறும் வாக்கியம் ஆப்தவாக்கியம் என்கிறார்.[11] சுருதி சாதாரண வழிமுறைகளால் வெளிப்படுவதில்லை. பக்குவமுடைய மனிதர்களுக்கு இறைவனாற் போதிக்கப்பட்ட உண்மைகளே அவைகளாகும் என ஹிக்ஸ் (Hicks) குறிப்பிடுகின்றார்.[12]

உரையளவை என்பதை ஆகமப் பிரமாணம், சப்தப் பிரமாணம் எனவும், ஆப்தவாக்கியம் எனவும் கூறுவர். ஆப்தனால் உச்சரிக்கப்படும் வாக்கியம் ஆப்தம்.[13] ஆப்தனானவன் உண்மைப் பொருளைக் கூறுபவன். அவாய் நிலை (ஆகாங்ஷை), தகுதி (யோக்கியதை), அண்மை (ஆசத்தி), கருத்து (தாற்பரியம்) என்பனவற்றால் ஆப்தன் உண்மையை அறிந்து கொள்கிறான்.

அவாய் நிலையானது ஒரு சொல் தன் பொருளை விளக்குவதற்காக மற்றொரு பொருளை அவாவி நிற்றல் என்ற பொருளைத் தருகிறது. தகுதியாவது, ஒரு சொல் மற்றொரு சொல்லைச் சென்று தழுவுவதற்குத் தகுதியுடைய தாகும். அண்மையாவது சொற்களை இடையீடின்றி பொருளமையக் கூறுவதாகும். கருத்தாவது உட்பொருளைக் குறிக்கும்.[14] ஆப்தம் தந்திரம், மந்திரம், உபதேசம் என மூவகைப்படும். தந்திரம் என்பது இறைவன் அருளிய நூல்களை முன்பின் முரண்பாடின்றி விளக்குவதாகும். மந்திரம் என்பது மனம் முதலிய கருவிகளை அடக்கி வழிபடும் திறனை அறிவது. உபதேசம் என்பது இறைவனின் அருளியல்புகளைத் தானும் பிறரும் உணரச் செய்தல்.[15] உரையளவையானது தானும் பிறரும் உணரச் செய்தல். உரையளவையானது காட்சி அனுமானத்தையும் விடச் சிறந்ததும் உயர்ந்ததுமென சமய சிந்தனையாளர்கள் வாதிடுவர்.

## 4. பொருட்பேறு அளவை :

ஒன்றை பிறிதொன்றால் விளக்குவதே அருந்தாபத்தி எனப்படும். குறிப்பிட்ட மனிதன் உயிருடன் இருப்பது தெரியும். ஆனால் அவன் வீட்டில் இல்லை, உயிருடன் இருக்கின்றான் என்ற இரு கூற்றுக்களுக்கும் இணங்க அவன் வீட்டிற்கு வெளியே இருக்கின்றான் என அனுமானிப்பது அருந்தாபத்தியாகும். வீட்டிற்கு வெளியே அவன் இருக்க வேண்டும் என்ற அறிவு உயிருடன் இருக்கும் அவன் வீட்டிலில்லாத உண்மையை விளக்க எழுகின்றது.

அருந்தாபத்திப் பிரமாணமாவது பொருட்குறிப்புடையது. உதாரணமாகப் பகலுண்ணான் பருத்திருக்கிறான் என்பதிலிருந்து இரவிலுண்பான் எனக் கொள்வது அருந்தாபத்தி அனுமானமாகும்.[16]

அருந்தாபத்தியானது இரு வகைப்படும். கட்புலன் அனுபவத்திலிருந்து அனுமானிக்கப்படுவது, செவிப்புலன் அனுபவத்திலிருந்து அனுமானிக்கப் படுவது, கட்புல அருந்தாபத்திற்குச் சான்றாக ஒரு சிப்பியில் வெள்ளியின் தன்மையை முதலிற் கண்டு பின்னர் அதைச் சிப்பி என அறியும் போது வெள்ளியின் தன்மை மறைந்து போகின்றது. *சிப்பியின் உண்மையை அறியப்படுகிறது.*

## 5. உவமையளவை :

அறிவை அடையும் தனித்த அல்லது சுதந்திரமான கருவியாகவே ஒப்புமை காணப்படுகிறது. இது உவமானப் பிரமாணம் எனவும் அழைக்கப்படுகிறது. அறிந்த பொருளைக் கொண்டு அறியாப் பொருளை அதனோடு ஒப்பிட்டு விளக்குவது ஒப்புமை அளவையாகும். ஆமா எனும் சொற்பொருள் உணராத ஒருவன் ஆவினை ஒக்கும் ஆமா என ஒருவர் கூறக் கேட்பது ஒப்புமையாகும். நையாயிகர் கருத்துப்படி காட்டுவிலங்கு, பசுவை ஒத்தது என்று கேள்வியால் அறிந்த ஒருவன் காட்டில் கவயத்தைக் காணும் போது தான் முன்னர் அறிந்த கவயத்திற்கும் (காட்டுப்பசு) பசுவுக்குமுள்ள ஒற்றுமையை நினைவு கூறுகிறான். இதன் மூலம் கவயம் பசுவை ஒத்த மிருகமென அறிகிறான். இதனால் தான் கேட்ட ஒன்றுக்கும் கண்ட ஒன்றுக்குமுள்ள தொடர்பை நன்கு அறிகிறான். இந்த அறிவு ஒப்புமையால் வந்த அறிவாகும்.[17]

## 6. இன்மையளவை :

அபாவம் என்பது இன்மை எனலாம். அ – என்பது எதிர்மறை, பாவம் என்பது உள்ளது. இது பிராகபாவம், பிரத்துவமிசாபாவம், அத்தியந்தாபாவம், அந்நியோன்னியாபாவம் என நான்கு வகைப்படுகிறது. முன்னர் இலதாய பொருள் பின்னர் உளதாவதை பிராகபாவம் சுட்டுகிறது. அதேபோல் முன்னிருந்தது

பின் இல்லாததால் பிரத்துவம்சாபாவம். அத்தியந்தாபாவம் என்பது முழுதுமின்மை என்னும் அபாவமாகும். அடுத்து அந்நியோன்யாபாவம் என்பது ஒன்றிலொன்றின்மை என்பதாகும். பதி, பாசம் என்பன, ஒன்றிலொன்று இல்லாதிருப்பதை இதற்கு உதாரணமாகக் கூறலாம்.[18]

மேற்கூறிய ஆறு பிரமாணங்களில் சார்வகர்கள் காட்சியை மட்டுமே பிரமாணமாக ஏற்றுக் கொள்கின்றனர். ஜைனரும், பௌத்தர்களும் காட்சியையும், அனுமானத்தையும் பிரமாணமாக ஏற்றுக் கொள்கின்றனர். சாங்கியமும் யோகமும் காட்சி, அனுமானம், உரை என்ற மூன்றினையும் ஏற்கின்றனர். அடுத்து நையாயிகர் காட்சி, அனுமானம் உரை, உபமானம் என்ற நான்கினையும் ஏற்கின்றனர். பிரபாகரைத் தொடர்ந்த சில மீமாம்சகர்கள் காட்சி, அனுமானம், உரை, உபமானம் என்பனவற்றோடு அருத்தாபத்தி (பொருட்பேறு) என்பதையும் ஏற்கின்றனர். அடுத்து வேதாந்திகள் மேற்கூறிய ஐந்தோடு அனுபலப்தியையும் சேர்த்து ஆறாகக் கூறுகின்றனர்.[19]

இவ்வாறு இந்திய தர்சனங்கள் தமது நிலைப்பாட்டுக்கு ஏற்றவாறு பிரமாணங்களில் ஒன்றையோ பலவற்றையோ ஏற்றுக் கொள்வது குறிப்பிடத்தக்கது.

## அடிக்குறிப்புக்கள்

01. இராமனுச்சாரி, இரா., (ஆண்டு இல்லை) *அறிவாராய்ச்சியியல்,* சென்னை, ப.04.

02. Atrayar, B.L., (1948) ***Elements of Indian Logic,*** Bombay, p.33.

03. Ibid, p.38.